Q.C. 148

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Compendium of Office Orders and Instructions to Applicants for the Staff of the Tamil Nadu Public Service Commission (Without Books) | 076 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour　　　　　　Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. All recruitments by the TNPSC are purely __________ based.
தேர்வாணையத்தின் தெரிவுகள் அனைத்தும் விண்ணப்பதாரரின் __________ படியே மேற்கொள்ளப்படுகின்றன.

(A) Rank order
தர வரிசை

(B) Marks obtained in SSLC
பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின்

(C) Marks obtained in HSC
பனிரெண்டாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்களின்

(D) None of the above
மேற்கூறிய எதுவுமில்லை

2. A short notice regarding Commission's Notification is published in
தேர்வாணைய அறிவிக்கை குறித்த அறிவிப்பு கீழே குறிப்பிட்டுள்ளபடி வெளியிடப்படும்.

(A) Two Tamil Newspapers
இரண்டு தமிழ் செய்தித்தாட்களில்

(B) Two English Newspapers
இரண்டு ஆங்கில செய்தித்தாட்களில்

(C) One Tamil and One English Newspaper
ஒரு தமிழ் மற்றும் ஒரு ஆங்கில செய்தித்தாட்களில்

(D) One Tamil and Two English Newspapers
ஒரு தமிழ் மற்றும் இரண்டு ஆங்கில செய்தித்தாட்களில்

3. Applicants should apply only through
விண்ணப்பதாரர்கள் __________ மட்டுமே தேர்வாணையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(A) in person
நேரிடையாக

(B) by post
அஞ்சல் மூலமாக

(C) both in person and by post
நேரிடையாக மற்றும் அஞ்சல் மூலமாக

(D) online mode
இணைய வழியில்

4. Linking __________ with One Time Registration (OTR) is mandatory for applicants.
விண்ணப்பதாரர் தங்களுடைய ஒருமுறைப் பதிவுடன் __________ இணைப்பது கட்டாயமாகும்.

(A) Permanent Account Number
நிரந்தர கணக்கு எண்

(B) Voter Identity Card
வாக்காளர் அடையாள அட்டை

(C) Bank Savings Account Number
வங்கி சேமிப்பு கணக்கு எண்

(D) Aadhaar Number
ஆதார் எண்

5. One Time Registration is valid for __________ years from the date of registration.
ஒரு முறைப் பதிவு என்பது பதிவு செய்த நாள் முதல் எத்தனை ஆண்டுகள் வரை செல்லுபடியாகும்?

(A) Five
ஐந்து

(B) Six
ஆறு

(C) Two
இரண்டு

(D) Ten
பத்து

6. During One Time Registration the applicant should upload the scanned image of that photograph taken within the last __________ months.
ஒரு முறைப் பதிவின் போது விண்ணப்பதாரர் எத்தனை மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட தங்களது புகைப்படத்தினை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்?

(A) Six
ஆறு

(B) Two
இரண்டு

(C) Three
மூன்று

(D) Ten
பத்து

7. A valid __________ and __________ is mandatory for One Time Registration.
ஒரு முறை பதிவு செய்வதற்கு பயன்பாட்டில் உள்ள __________ மற்றும் __________ ஆகியவை கட்டாயமாகும்.

(A) Face book account and Mobile Number
முகநூல் மற்றும் அலைபேசி எண்

(B) e-mail ID and Mobile Number
மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்

(C) Face book account and e-mail ID
முகநூல் மற்றும் மின்னஞ்சல் முகவரி

(D) Whatsapp and Face book account
பகிரி மற்றும் முகநூல்

8. While applying, applicants shall be permitted to choose __________ districts.
விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் போது __________ மாவட்டங்களை தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்படுவார்.

(A) Two
இரண்டு

(B) Three
மூன்று

(C) Four
நான்கு

(D) Five
ஐந்து

9. Applicants can choose the following mode only for making payment of Examination fee
விண்ணப்பதாரர் அவர்தம் தேர்வு கட்டணத்தை கீழ்க்காணும் வழிமுறையில் மட்டுமே செலுத்தலாம்

(A) Through Net Banking
இணைய வழி மூலமாக

(B) Through Demand Draft
வங்கி கேட்பு காசோலை மூலமாக

(C) Through Cheque
காசோலை மூலமாக

(D) Through Indian Postal Order
இந்திய அஞ்சல் ஆணையாக

10. After the last date of submission of online applications Application Correction Window shall open for __________ days to edit the details in their application.
இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதிக்குப் பின்னர் விண்ணப்பத் திருத்தச் சாளரம் __________ நாட்களுக்கு அவர்தம் விண்ணப்பங்களில் உள்ள விவரங்களை திருத்தம் செய்ய செயல்படுத்தப்படும்.

(A) Two
இரண்டு

(B) Three
மூன்று

(C) Five
ஐந்து

(D) Seven
ஏழு

11. How many days the candidates shall be permitted to upload/reupload the documents prior to the date of examination?
தேர்வு நடைபெற உள்ள தேதிக்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் வரை சான்றிதழ்களை திருத்தம்/பதிவேற்றம்/மறுபதிவேற்றம் செய்ய விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்படுவர்?

(A) Two
இரண்டு

(B) Seven
ஏழு

(C) Twelve
பனிரெண்டு

(D) Ten
பத்து

12. The applicant shall be eligible to apply only as per the provisions of which section of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் பணி நிபந்தனைகள் சட்டம் 2016ன் எந்த பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பதாரர் தகுதி பெற்றிருக்க வேண்டும்?

(A) Section 20(5)
பிரிவு 20(5)

(B) Section 20(7)
பிரிவு 20(7)

(C) Section 20(3)
பிரிவு 20(3)

(D) Section 20(2)
பிரிவு 20(2)

13. The applicant should be eligible for appointment to any service by direct recruitment only if he has completed the age of __________ years as on the 1st July of the year in which the Notification is issued.
நேரடி நியமனம் மூலம் எந்த பணிக்கும் நியமனம் செய்ய தேர்வு அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டின் ஜூலை முதல் நாள் அன்று விண்ணப்பதாரர் எத்தனை வயது நிறைவு செய்திருக்க வேண்டும்?

(A) 21
21 வயது

(B) 25
25 வயது

(C) 30
30 வயது

(D) 18
18 வயது

14. On which date the applicant should possesses the educational qualification including experience prescribed for a post?
குறிப்பிட்ட பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி, பணி முன் அனுபவம் உள்ளிட்ட அனைத்து தகுதிகளையும் எந்த நாளன்று பெற்றிருக்க வேண்டும்?

(A) On the date of notification of the vacancy
காலிப்பணியிட அறிவிக்கை வெளியிட்ட நாளன்று

(B) Last date prescribed for receipt of application on online mode
இணைய வழியில் விண்ணப்பம் பெற நிர்ணயம் செய்யப்பட்ட கடைசி நாளன்று

(C) On the date of Preliminary Examination
முதனிலை தேர்வு நிர்ணயிக்கப்பட்ட நாளன்று

(D) On the date of beginning of Counselling
கலந்தாய்வு தொடங்கும் நாளன்று

15. For direct recruitment an applicant has not elapsed a period of __________ years since his first appointment to a service of the Govt. of India or the Govt. of a State/Union Territory.
விண்ணப்பதாரர் நேரடி நியமனம் செய்ய இந்திய அரசு அல்லது மாநில அரசு/யூனியன் பிரதேச பணியில் முதலில் சேர்ந்த நாளிலிருந்து எத்தனை ஆண்டுகள் நிறைவடையாது இருக்க வேண்டும்?

(A) Three
மூன்று

(B) Two
இரண்டு

(C) One
ஓராண்டு

(D) Five
ஐந்து

16. As per the Proviso of which section of the T.N. Govt. Servants (Conditions of Service) Act 2016, an ex-serviceman once recruited to a post in any class or service or category cannot claim the concession of being called an ex-serviceman for his further recruitment.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் பணி நிபந்தனைகள் சட்டம் 2016ன் எந்த விதியில் உள்ள வரம்புரையின் படி முன்னாள் இராணுவத்தின் ஏதேனும் ஒரு பதவிப் பணியில் சேர்ந்த பின்னர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையை மீண்டும் பெற முடியாது?

(A) Section 3(J)
பிரிவு 3(J)

(B) Section 3(e)
பிரிவு 3(e)

(C) Section 3(a)
பிரிவு 3(a)

(D) Section 3(d)
பிரிவு 3(d)

17. Person serving in the Armed Forces shall be eligible to apply for posts if they are due to complete the specified terms of their engagement in the Armed Forces within __________ from the last date prescribed by the commn. for receipt of the online application.
அறிவிக்கை வெளியிட்டு விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான இறுதி நாளிலிருந்து எவ்வளவு காலத்திற்குள் முப்படைப் பணியிலிருந்து விடுவிப்பு பெறவிருக்கும் இராணுவ வீரர்கள் விண்ணப்பிக்கலாம்?

(A) Three months
மூன்று மாதங்கள்

(B) Six months
ஆறு மாதங்கள்

(C) One year
ஓராண்டுக்குள்

(D) Ten months
பத்து மாதங்கள்

18. Persons with Benchmark Disability means a person will not less than __________ of a specified disability where specified disability has not been defined.
"நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்" என்பவர் குறிப்பிட்ட இயலாமையின் அளவு அளவிடக்கூடிய வகையில் வரையறுக்கப்படாமல் இருந்தால், இயலாமையின் அளவு, எந்த அளவிற்கு குறைவில்லாமல் இருக்க வேண்டும்.

(A) 40%
(B) 35%
(C) 25%
(D) 38%

19. "Destitute Widow" means whose total monthly income from all sources shall not be more than ___________.
"ஆதரவற்ற விதவை" என்பவர் அனைத்து வழிகளிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் எவ்வளவு தொகைக்கு மிகாமல் இருக்க வேண்டும்?

(A) Rs. 4,500/-
ரூ. 4,500/-

(B) Rs. 3,000/-
ரூ. 3,000/-

(C) Rs. 5,000/-
ரூ. 5,000/-

(D) Rs. 4,000/-
ரூ. 4,000/-

20. A certificate in support of claim as "Destitute Widow" shall be obtained from ___________.
"ஆதரவற்ற விதவை" என்பதற்கு உரிய சான்றிதழ் பின்வரும் அலுவலரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்

(A) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

(B) Deputy Tahsildar (Certificates)
துணை வட்டாட்சியர் (சான்றிதழ்கள்)

(C) Head quarters Deputy Tahsildar
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்

(D) Tahsildar
வட்டாட்சியர்

21. The caste Pagadai include in the following category
பகடை என்ற இனமானது கீழ்க்கண்ட பிரிவிற்குள் வரும்

(A) Most backward classes
மிகவும் பிற்படுத்தப்பட்டோர்

(B) Backward classes
பிற்படுத்தப்பட்டோர்

(C) Scheduled Tribes
பழங்குடியினர்

(D) Arunthathiyar
அருந்ததியர்

22. If a post filled by direct recruitment and educational qualification in prescribed as degree an applicant who claim person studied in Tamil Medium he shall be studied
நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படும் ஒரு பதவிக்கு பட்டப்படிப்பு கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டால் விண்ணப்பதாரர் தமிழ்வழியில் படித்தவர் என்று கோரும் போது அன்னார்

(A) Degree in Tamil Medium of Instructions
பட்டப்படிப்பினை தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும்

(B) In degree he studied 'Tamil' as one of the subject
பட்டப்படிப்பில் தமிழை ஒரு பாடமாக எடுத்து படித்திருக்க வேண்டும்

(C) HSC in Tamil Medium of Instruction
மேல்நிலை வகுப்பினை தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும்

(D) SSLC, HSC and Degree through Tamil Medium of Instructions
பள்ளி இறுதி வகுப்பு/மேல்நிலை வகுப்பு/மற்றும் பட்டப்படிப்பு ஆகியவற்றை தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும்

23. A general category, ex-servicemen who in otherwise qualified shall be eligible for appointment if he has not completed the age of __________ one the 1st July of the year in which the vacancies are notifed.
தேர்வு அறிவிக்கை வெளியிடப்படும் வருடத்தின் ஜூலை முதல் நாளன்று பொதுபிரிவைச் சார்ந்த ஒரு முன்னாள் இராணுவத்தினர் அனைத்து இதர தகுதிகள் பெற்றிருப்பின் நியமனத்திற்கு தகுதி பெற எத்தனை வயதை நிறைவு செய்யாமல் இருக்க வேண்டும்?

(A) 53 (B) 50
(C) 48 (D) 45

24. Persons with benchmark disability will be eligible for age concession of how many years above the age limit prescribed, provided they are found to be otherwise eligible
நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுகளுடைய மாற்றுத்திறனாளிகள் இதர தகுதிகள் அனைத்தும் பெற்றிருப்பின் நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் எத்தனை ஆண்டுகள் வரை சலுகை பெற முடியும்?

(A) Ten
பத்து

(B) Five
ஐந்து

(C) Two
இரண்டு

(D) Six
ஆறு

25. Bonded Labourers/their son or unmarried daughters can apply for posts under category C and D if they are not completed __________ years of age on the 1st July of the year in which the vacancies are notified.
"சி" மற்றும் "டி" பிரிவுகளின் கீழ்வரும் பதவிகளுக்கு பிணைத்தொழிலாளி அல்லது அவரின் மகன் அல்லது கல்யாணம் ஆகாத மகள் தேர்வு அறிவிக்கை வெளியிடப்படும் ஜூலை மாதம் முதல் நாளன்று எத்தனை வயது நிரம்பாதவராக இருக்க வேண்டும்?

(A) 42
(B) 40
(C) 53
(D) 48

26. For direct recruitments, maximum age limit has been increased for how many years vide G.O. (MS) No. 91, Human Resources Management (S) Dept. dated 13.09.2021
நேரடி நியமனத்திற்கான உச்ச வயது வரம்பு மேலும் எத்தனை ஆண்டுகள் உயர்த்தப்பட்டு அரசாணை (நிலை) எண் 91 மனித வள மேலாண்மைத் (எஸ்) துறை நாள் 13.9.21ல் ஆணையிடப்பட்டுள்ளது?

(A) One
ஒன்று
(B) Three
மூன்று
(C) Two
இரண்டு
(D) Five
ஐந்து

27. How many times an Ex-Servicemen get fees concession?
முன்னாள் இராணுவத்தினர் எத்தனை முறை தேர்வு கட்டணம் செலுத்தத் தேவையில்லை?

(A) Two
இரண்டு
(B) Three
மூன்று
(C) Five
ஐந்து
(D) Fee Exemption
கட்டணம் செலுத்த தேவையில்லை

28. A minimum of how many percentage of all vacancies shall be set apart for women candidates?
மொத்தம் கணக்கிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில் குறைந்தபட்சம் எத்தனை சதவீதம் பெண் விண்ணப்பதாரர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது?

(A) Ten
பத்து
(B) Five
ஐந்து
(C) Thirty
முப்பது
(D) Twenty
இருபது

29. Out of vacancies reserved for women candidates in direct recruitment how many percentage of vacancies are reserved for destitute widows to any post under the State Government with a pay level not exceeding Rs. 20,600/- – 65,500/- in the pay matrix?
மாநில அரசின் கீழ் ஊதிய நிலை ரூ. 20,600/- – 65,500/-க்கு மிகாத பதவிகளுக்கு பெண் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில் எத்தனை சதவீதம் பணியிடங்கள் அந்தந்த ஒதுக்கீட்டு பிரிவைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கு வழங்கப்படும்?

(A) Five
ஐந்து

(B) Ten
பத்து

(C) Seven
ஏழு

(D) Twenty
இருபது

30. Out of total number of vacancies in each communal category how many percentage shall be reserved for ex-servicemen in the posts which are classified under Group-C?
ஒவ்வொரு பிரிவிலும் முன்னாள் இராணுவத்தினருக்கு அரசுப்பணிகளில் "C" தொகுப்பிலுள்ள பதவிகளில் மட்டுமே எத்தனை சதவீதம் காலிப்பணியிடம் ஒதுக்கீடு செய்யப்படும்?

(A) Five
ஐந்து

(B) Three
மூன்று

(C) Ten
பத்து

(D) Seven
ஏழு

31. Under which section of the Rights of Persons with Disabilities Act 2016, Reservation for persons with benchmark disabilities shall be made in respect of posts identified by the Government in each department?
மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016ன் எந்த பிரிவின்படி ஒவ்வொரு துறையிலும் அரசால் இனம் காணப்பட்ட பதவிகள் மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரருக்கு நியமன ஒதுக்கீடு செய்யப்படுகிறது?

(A) 33
(B) 35
(C) 30
(D) 32

32. In how many times a vacancy reserved for person with benchmark disability shall be carried forward due to nonavailability a suitable person with benchmark ability?
மாற்றுத்திறனாளிகள் ஒதுக்கீட்டிற்கு தகுதியுடைய நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் இல்லாத போது அந்த காலிப்பணியிடம் எத்தனை முறை அடுத்த தெரிவிற்கு முன்கொணர்வு செய்யப்படும்?

(A) One
ஒன்று

(B) Two
இரண்டு

(C) Four
நான்கு

(D) Five
ஐந்து

33. What is the percentage of reservation to Adidravida Arunthathiar classes under preferential basis?
முன்னுரிமை அடிப்படையில் ஆதி திராவிட அருந்ததியர் வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டு அளவு என்ன?

(A) 5%
(B) 3.5%
(C) 2%
(D) 3%

34. In which schedules of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016, the minimum general educational qualification mentioned?
குறைந்தபட்ச பொதுக் கல்வித்தகுதி என்பது தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, எந்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Schedule I
பட்டியல் I

(B) Schedule II
பட்டியல் II

(C) Schedule III
பட்டியல் III

(D) Schedule IV
பட்டியல் IV

35. Under which section of the Tamil Nadu Government Servants (Conditions of Services) Act 2016, no persons shall be eligible for appointment unless responses the qualification mentioned in it?
தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016ன் எந்த பிரிவில் குறிப்பிட்டுள்ள தகுதிகளை பெற்றிருக்கவில்லையெனில் ஒரு விண்ணப்பதாரர் பணி நியமனம் செய்ய தகுதியற்றவராகிறார்?

(A) Section 25
பிரிவு 25

(B) Section 27
பிரிவு 27

(C) Section 30
பிரிவு 30

(D) Section 22
பிரிவு 22

36. Where the Special Rules prescribe a degree as a qualification for a post by direct recruitment, it shall be obtained in the following sequence?
சிறப்பு விதிகளில் ஒரு பதவிக்கான நேரடி நியமனம் செய்ய கல்வித் தகுதியாக இளங்கலை பட்டம் நிர்ணயிக்கப்பட்டிருப்பின், அதனை பின்வரும் முறையில் பெற்றிருக்க வேண்டும்

(A) SSLC / HSC / Degree
பள்ளியிறுதி வகுப்பு/மேனிலை வகுப்பு/இளங்கலை பட்டம்

(B) SSLC / Degree / HSC
பள்ளியிறுதி வகுப்பு/இளங்கலை பட்டம்/மேனிலை வகுப்பு

(C) HSC / PG Degree / Degree
மேனிலை வகுப்பு/முதுநிலை பட்டம்/இளங்கலைப் பட்டம்

(D) SSLC / PG Degree / Degree
பள்ளியிறுதி வகுப்பு/முதுநிலை பட்டம்/இளங்கலைப் பட்டம்

37. In which date the candidate claiming equivalence of qualification should possess evidence for such claim in the form of G.O.?
இணைக் கல்வித் தகுதி பெற்றிருப்பதாக உரிமை கோரும் விண்ணப்பதாரர் அதற்கான அரசாணையினை எந்த நாளில் பெற்றிருக்க வேண்டும்?

(A) G.O. issued on or before the date of notification
தேர்வுக்கான அறிவிக்கை நாளுக்கு முன்னதாகவோ அல்லது அறிவிக்கை நாளன்றோ

(B) G.O. issued after the date of notification
தேர்வுக்கான அறிவிக்கை நாளுக்கு பின்னதாக

(C) G.O. issued on or before the date of written examination
எழுத்துத் தேர்வு நடைபெறும் நாளுக்கு முன்னதாகவோ அல்லது எழுத்துத்தேர்வு நாளன்றோ

(D) G.O. issued on or before the date of counselling started
கலந்தாய்வு தொடங்கும் நாளுக்கு முன்னதாகவோ அல்லது கலந்தாய்வு தொடங்கும் அன்றோ

38. After which section of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016, it has been mentioned that no person shall be eligible for appointment to any service by direct recruitment unless he has an adequate knowledge in Tamil?
தமிழில் போதுமான அறிவு கொண்டிருந்தாலன்றி நேரடி நியமனத்தின் மூலமாக எந்தப் பணியிலும் பணியமர்த்தப்படுவதற்கு தகுதியுடையவர் அல்லர் என தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ன் எந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) Section 20
பிரிவு 20

(B) Section 22
பிரிவு 22

(C) Section 21
பிரிவு 21

(D) Section 23
பிரிவு 23

39. For the offence of Production of bogus certificate or tampering or alteration in the certificate the period of dearment is __________.
சான்றிதழ்களில் திருத்தம் அல்லது சேதங்களை ஏற்படுத்துதல் அல்லது போலியாக சமர்ப்பித்தல் போன்ற குற்றங்களுக்கு விலக்கி வைக்கப்படும் கால அளவு __________.

(A) Three years
மூன்று ஆண்டுகள்

(B) One year
ஓராண்டு

(C) Permanent
நிரந்தரமாக

(D) Permanent and initiation of Criminal Action
நிரந்தரமாக மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்கப்படும்

40. Written certain unwarranted remarks, unconnected with answers to the subject concerned in the answer books etc. i.e. vulgar, derogatory and obscene languages
விடைகளுக்கு தொடர்பில்லாத தேவையற்ற குறியீடுகள், தரக் குறைவான மற்றும் ஆபாசமான சொற்களை விடைத்தாள்களில் எழுதுதல் போன்ற குற்றத்திற்கு விலக்கி வைக்கப்படும் காலம் __________.

(A) One year
ஓராண்டு

(B) Three years
மூன்றாண்டுகள்

(C) Permanent
நிரந்தரமாக

(D) Five years
ஐந்தாண்டுகள்

41. For claims of change of name or use of alias must be supported by uploading the following document
பெயர் மாற்றம் அல்லது மாற்றுப் பெயர் பயன்படுத்துதல் தொடர்பான தகவல்களுக்கு ஆதாரமாக பின்வரும் ஆவணத்தினை பதிவேற்றம் செய்ய வேண்டும்

(A) A notification in the Government Gazette
அரசிதழில் வெளியான அறிவிக்கை

(B) A certificate from College Principal
கல்லூரி முதல்வரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்

(C) A certificate from Tahsildar
வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்

(D) A certificate from Headmaster of the School
பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்

42. From the following document Gender Claimed (Other than Transgender) shall be verified
பின்வரும் ஆவணங்களில் அடிப்படையில் பாலினம் (திருநங்கைகள் தவிர) சரிபார்க்கப்படும்

(A) Certificate issued by Tahsildar
வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்

(B) Transfer certificate / Community Certificate
மாற்றுச் சான்றிதழ்/சாதி சான்றிதழ்

(C) Birth Certificate
பிறப்புச் சான்றிதழ்

(D) Certificate issued by School Head Master
பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்

43. The candidate who possess the oriented school leaving certificate wherein their date of birth is not mentioned must submit the following document in lieu of their date of birth
பிறந்த தேதி குறிப்பிடாமல் இருக்கும் ஓரியண்டல் பள்ளி மதிப்பெண் பட்டியல் வைத்திருக்கும் விண்ணப்பதாரர் கீழ்க்கண்ட ஆவணங்களை பிறந்த தேதியினை சரிபார்க்க பதிவேற்றம் செய்யவேண்டும்

(A) Certificate issued by School Head Master
பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்

(B) Certificate issued by Tahsildar
வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்

(C) Certificate issued by College Principal
கல்லூரி முதல்வரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்

(D) Transfer Certificate / Birth Certificate
மாற்றுச் சான்றிதழ்/பிறப்புச் சான்றிதழ்

44. A candidate should obtain and produce the community certificate by mentioning the following name in the form prescribed in G.O. (MS) No. 781, Revenue Department, dated 2.5.1988
அரசாணை எண் 781, வருவாய்த் துறை நாள் 02-05-1988ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பெயரை குறிப்பிட்டு சாதிச்சான்றிதழ் பெற்று விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும்

(A) Husband's name
கணவரின் பெயர்

(B) Wife name
மனைவியின் பெயர்

(C) Father's or Mother's name
தந்தை அல்லது தாயின் பெயர்

(D) Grand Father's name
தாத்தாவின் பெயர்

45. The applicants who belongs to SC/SC(A) community shall be produced the community certificate from one of the following Competent Authority
ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்) சமூகப் பிரிவைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் பின்வரும் அலுவலரிடமிருந்து சாதி சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்

(A) Zonal Deputy Tahsildar
மண்டல துணை வட்டாட்சியர்

(B) Sub Collector
சார் ஆட்சியர்

(C) Deputy Tahsildar (Certificates)
துணை வட்டாட்சியர் (சான்றிதழ்கள்)

(D) Tahsildar
வட்டாட்சியர்

46. Candidates in possession of a community certificate obtained outside the State of Tamil Nadu should produce/upload the following certificate along with community certificate
தமிழ்நாடு அல்லாத பிற மாநிலங்களிலிருந்து ஆதிதிராவிடர்/ஆதிதிராவிட அருந்ததியர்/ பழங்குடியினர் என சாதிச் சான்று பெற்றவர்கள் தங்கள் சாதி சான்றிதழுடன் கீழ்கண்ட சான்றிதழையும் கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும்

(A) Income certificate of Father/Mother
தகப்பனார்/தாயாரின் வருமானச் சான்றிதழ்

(B) Aadhaar No. of Father/Mother
தகப்பனார்/தாயாரின் ஆதார் எண்

(C) Nativity Certificate of Father/Mother
தகப்பனார்/தாயாரின் இருப்பிடச் சான்றிதழ்

(D) PAN number of Father/Mother
தகப்பனார்/தாயாரின் நிரந்தர கணக்கு எண்

47. The community certificate produced by the candidate who belongs to ST community in liable to verification by __________.
பழங்குடியினத்தைச் சார்ந்த விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட சாதிச் சான்றிதழின் மெய்த் தன்மையானது யாரால் சரிபார்க்கப்படும்?

(A) State Level Scrutiny Committee
மாநில கூர்நோக்கு குழு

(B) District Level Scrutiny Committee
மாவட்ட கூர்நோக்கு குழு

(C) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்

(D) Sub-Collector
சார் ஆட்சியர்

48. Transgender candidates who do not possess any community certificate may choose the following community as per G.O. (MS) No. 28 Backward Classes, Most Backward Class and Minorities Welfare Department dated 6.4.2015.
எந்தவொரு சாதிச் சான்றிதழும் இல்லாத திருநங்கை விண்ணப்பதாரர் அரசாணை (நிலை) எண் 28, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள் 6.4.2015–ன் படி கீழ்க்கண்ட பிரிவினை தேர்வு செய்துக் கொள்ளலாம்.

(A) Backward Classes
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்

(B) Scheduled Caste/Scheduled Caste Arunthathiyar
ஆதிதிராவிடர்/ஆதிதிராவிட அருந்ததியர்

(C) Scheduled Tribe
பழங்குடியினர்

(D) Most Backward Classes
மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்

49. Candidates with bench marks disability when he make request to permit him to utilise the services of a scribe
நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர் பதிலி எழுத்தரின் உதவி வேண்டும் என எப்போது கோரிக்கை வைக்க வேண்டும்?

(A) in online application
இணைய வழி விண்ணப்பத்தில்

(B) after the submission of application
விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர்

(C) on the date of Examination
தேர்வு நடைபெறும் நாளன்று

(D) at the time of one time Registration
ஒருமுறைப் பதிவின் போது

50. How much compensatory time will be allowed to the candidate with benchmark disability who have physical limitations to write including that of speed and who are utilizing the services of a scribe
தேர்வினை வேகமாக எழுத இயலாத உடல் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர் பதிலி எழுத்தரின் உதவியுடன் தேர்வு எழுதும் போது வழங்கப்படும் கூடுதல் நேரம் எவ்வளவு?

(A) 10 minutes per hour of examination
ஒரு மணி நேரத்திற்கு 10 நிமிடம் வீதம்

(B) 20 minutes per hour of examination
ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடம் வீதம்

(C) 15 minutes per hour of examination
ஒரு மணி நேரத்திற்கு 15 நிமிடம் வீதம்

(D) 30 minutes per hour of examination
ஒரு மணி நேரத்திற்கு 30 நிமிடம் வீதம்

51. How much time before the candidates shall present themselves at the examination venue, the time scheduled for the commencement of the examination?
தேர்வு எழுத வரும் தேர்வர்கள் தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்பாகவே தேர்வு கூடங்களுக்கு வருகை புரிதல் வேண்டும்?

(A) 30 minutes
30 நிமிடங்கள்

(B) Two hours
இரண்டு மணிநேரம்

(C) One hour
ஒரு மணி நேரம்

(D) 20 minutes
20 நிமிடங்கள்

52. In case of objective type examination for distribution of question booklet a short bell is sounded before __________ minutes, before commencement of examination.
கொள்குறிவகைத் தேர்வுகளில் வினாத்தாள் வழங்கும் பொருட்டு தேர்வு தொடங்குவதற்கு எத்தனை நிமிடங்களுக்கு முன்பாக சிறு மணியோசை ஒலிக்கப்படும்?

(A) 20 minutes
20 நிமிடங்கள்

(B) 10 minutes
10 நிமிடங்கள்

(C) 25 minutes
25 நிமிடங்கள்

(D) 15 minutes
15 நிமிடங்கள்

53. When the candidates can download their OMR answer sheet descriptive type answer booklets from the commission website on payment of requisite fees
எப்போது தேர்வர்கள் உரிய கட்டணம் செலுத்தி தங்களது OMR விடைத்தாள் மற்றும் விரிந்துரைக்கும் வகைத் தேர்வு விடைப்புத்தகம் ஆகியவற்றை பதிவிறக்கம் செய்துக் கொள்ள முடியும்?

(A) after the written examination is over
எழுத்து தேர்வு முடிந்த பின்னர்

(B) after the end of Oral Test
நேர்காணல் தேர்வு முடிந்த பின்னர்

(C) after the end of counselling
கலந்தாய்வு முடிந்த பின்னர்

(D) after conclusion of the entire selection process
தேர்வு நடவடிக்கைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர்

54. Tentative answer keys will be hosted in the commission website within how much days from the date of conduct of objective type examination?
கொள்குறிவகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தேர்வு நடைபெற்ற நாளிலிருந்து எத்தனை வேலை நாட்களுக்குள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்?

(A) Two
இரண்டு

(B) Six
ஆறு

(C) Five
ஐந்து

(D) Three
மூன்று

55. In case of objective type examination the following colour ball point pen should be used
கொள்குறி வகைத் தேர்வுகளில் பின்வரும் மை கொண்ட பந்து முனை பேனா மட்டுமே உபயோகிக்க வேண்டும்

(A) Black colour
கருமை நிறம்

(B) Blue colour
நீல நிறம்

(C) Light Blue colour
வெளிர் நீல நீறம்

(D) Red colour
சிவப்பு நிறம்

56. If OMR sheet is not signed by the candidate at all required places, the penalty will be ___________.
OMR விடைத்தாளில் தேர்வர் கையொப்பமிடாத நேர்வில் கீழ்கண்ட தண்டனை வழங்கப்படும்

(A) Deduction of five marks
ஐந்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்

(B) Invalidation of Answer sheet
விடைத்தாள் செல்லாததாக்கப்படும்

(C) Deduction of Three marks
மூன்று மதிப்பெண்கள் குறைக்கப்படும்

(D) Deduction of Two marks
இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்

57. None of the answer bubbles is shaded for even one question by the candidate __________ marks will be deducted from the total marks obtained by him.
OMR விடைத்தாளில் எந்த ஒரு வினாவிற்கும் அது தொடர்பான எந்த ஒரு வட்டமும் நிரப்பப்படாதிருந்தால் தேர்வரால் பெறப்பட்ட மொத்த மதிப்பெண்களிலிருந்து __________ மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

(A) One
ஒன்று

(B) Three
மூன்று

(C) Two
இரண்டு

(D) Five
ஐந்து

58. Taking away from the examination hall, any used/unused OMR answer sheet without handing it over to the room invigilator the following penalty will be imposed
தேர்வுக் கூடத்திலிருந்து பயன்படுத்தப்பட்ட/பயன்படுத்தப்படாத OMR விடைத்தாளினை அறைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்காமல் எடுத்துச் செல்லுதல் குற்றத்திற்கான தண்டனை பின்வருமாறு.

(A) Invalidation of answer sheet
விடைத்தாள் செல்லாததாக்கப்படும்

(B) Deduction of Ten marks
பத்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்

(C) Deduction of Five marks
ஐந்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்

(D) Invalidation of answer sheet as well as debarment for such a period as the commission may deem fit
விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் தேர்வாணையம் கருதும் காலம் வரை தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்

59. In case of Descriptive Type Examination, usage of whitener, sketch pens, pencil, colour pencils, multi colour pens, crayons except black in pens the penalty will be
விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகளில், கருமை நிற மை கொண்ட பேனாக்களைத் தவிர விண்ணப்பதாரர் Whitener, Sketch pens பென்சில், வண்ணப் பென்சில்கள், வண்ண மை பேனா, Crayons போன்றவைகளை உபயோகப்படுத்துவதற்கான தண்டனை பின்வருமாறு

(A) Invalidation of answer booklet
விடைப்புத்தகம் செல்லாததாக்கப்படும்

(B) Deduction of Ten marks
பத்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்

(C) Deduction of Two marks
இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்

(D) Deduction of Five marks
ஐந்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்

60. In case of Descriptive Type Examination for writing Register Number incorrectly in the answer booklet the penalty will be
விரிந்துரைக்கும் வகைத் தேர்வில் விடைப்புத்தகத்தில் பதிவு எண் தவறாக எழுதப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை பின்வருமாறு

(A) a Deduction of Five marks
ஐந்து மதிப்பெண்கள் குறைக்கப்படும்

(B) a Deduction of Two marks
இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்

(C) invalidation of answer booklet
விடைப்புத்தகம் செல்லாததாக்கப்படும்

(D) a Deduction of Three marks
மூன்று மதிப்பெண்கள் குறைக்கப்படும்

61. The number of candidates to be admitted to the main written examination will be __________ times the number of candidates to be recruited to each of the posts in case of Combined Civil Services Examination-I.
ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு I பொறுத்தமட்டில் முதன்மை எழுத்து தேர்வுக்கு அனுமதிக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்களின் எண்ணிகையானது ஒவ்வொரு பதவிக்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைப் போல எத்தனை மடங்கு இருக்கும்?

(A) Twenty
இருபது

(B) Ten
பத்து

(C) Fifteen
பதினைந்து

(D) Five
ஐந்து

62. The candidates shall be admitted to original certificate verification and oral test on the following basis
விண்ணப்பதாரர்கள் மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் வாய்மொழித் தேர்வுக்கு எதன் அடிப்படையில் அனுமதிக்கப்படுவர்?

(A) Marks obtained in the Preliminary Examination
முதல்நிலைத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள்

(B) Marks obtained in the Main Written Examination
முதன்மை எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள்

(C) Subject to the rule of Reservation of appointment
நியமன ஒதுக்கீட்டு விதி

(D) Marks obtained in the main written examination and subject to the rule of reservation of appointments
முதன்மை எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் நியமன ஒதுக்கீட்டு விதி

63. If the number of vacancies notified/reserved to be filled up by any one or more of the reservation categories is four and below, the number of candidates to be admitted to the Oral Test from those particular reservation categories shall be ___________ times the number of vacancies.
நியமனத்திற்குரிய காலியிடங்கள் எந்தெந்த வகுப்பு பிரிவுகளில் நான்கு அல்லது அதற்கும் குறைவாக இருந்தால் அந்தக் குறிப்பிட்ட வகுப்புப் பிரிவுகளில் வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை அவ்வகுப்புப் பிரிவுகளில் நியமனம் செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரரின் எண்ணிக்கையைப் போன்று எத்தனை மடங்கு இருக்கும்?

(A) Two
இரண்டு

(B) Three
மூன்று

(C) Four
நான்கு

(D) Five
ஐந்து

64. Any other communication with the commission must be made through email to the following website
தேர்வாணையத்துடனான பிற தகவல் தொடர்பு அனைத்தும் கீழ்க்கண்ட இணையதளத்தில் மின்னஞ்சல் வழியாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும்

(A) www.tnpscexamns.in

(B) www.tnpsc.gov.in

(C) helpdesk@tnpscexamns.in

(D) grievance.tnpsc@tn.gov.in

65. Communications sent by post must be addressed only to ___________.
அஞ்சல் வழியாக தெரிவிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் யாருக்கு அனுப்பப்பட வேண்டும்?

(A) The Secretary
செயலாளர்

(B) Chairman
தலைவர்

(C) Member
உறுப்பினர்

(D) Under Secretary
சார்செயலாளர்

66. When the Details of marks of all candidates who had appeared for the main written examination and oral test will be made available in the commission's website
முதன்மை எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகளில் கலந்துக் கொண்ட விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள் எப்போது தேர்வாணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்படும்?

(A) on conclusion of the Oral Test
வாய்மொழித் தேர்வு முடிவுற்ற பின்னர்

(B) on the date of counselling started
கலந்தாய்வு தொடங்கும் நாளன்று

(C) on conclusion of counselling
கலந்தாய்வு முடிவுற்ற பின்னர்

(D) on completion of the entire selection process
தெரிவு தொடர்பான பணிகள் முழுமையாக முடிவுற்றப் பின்னர்

67. The following department should be maintain a "Increment Register" relating to the staff
பணியாளர்களுக்கான சம்பள உயர்வு பதிவேட்டினை கீழ்க்கண்ட துறையில் பராமரிக்கப்பட வேண்டும்

(A) Oral Test Department
நேர்முக தேர்வு துறை

(B) Personnel Department
பணியாளர் துறை

(C) Bills and Receipts Department
பட்டி மற்றும் வரவுத் துறை

(D) Rules and Notification Department
விதிகள் மற்றும் அறிவிக்கை துறை

68. All the Officers and Staff who attend office before __________ a.m. is eligible for Refreshment Charges.
காலை எந்த நேரத்திற்கு முன்பாக அலுவலகம் வரும் அலுவலர்களுக்கு சிற்றுண்டி கட்டணம் வழங்கப்படும்?

(A) 7.30 A.M.
7.30 மணிக்கு

(B) 8.30 A.M.
8.30 மணிக்கு

(C) 8 A.M.
8 மணிக்கு

(D) 8.45 A.M.
8.45 மணிக்கு

69. The ratio of the length to the height (width) of the National Flag shall be ____________.
இந்திய தேசியக் கொடியில் நீளம் மற்றும் உயரத்திற்கு (அகலம்) இடையே உள்ள விகிதம் ____________.

(A) 2 : 3
(B) 3 : 2
(C) 1 : 2
(D) 1 : 3

70. In respect of recruitment to posts included in the Group IV Service Examination a window of ____________ clear working days shall be given to candidates for uploading the requisite documents.
தொகுதி IV ல் அடங்கியுள்ள பதவிகளுக்கான தெரிவில் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பான ஆவணங்களை பதிவேற்றம் செய்ய ____________ வேலை நாட்களுக்குள் அதற்கான சாளரத்தை (Window) வழங்கப்பட வேண்டும்.

(A) 14
(B) 21
(C) 10
(D) 7

71. The following certificate submitted by the candidate shall not be verified by the Commission's Office
விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கீழ்க்கண்ட சான்றிதழின் மெய்த்தன்மை தேர்வாணைய அலுவலகத்தில் சரிபார்ப்பதில்லை

(A) Destitute Widow Certificate
ஆதரவற்ற விதவை சான்றிதழ்
(B) Community Certificate
சாதி சான்றிதழ்
(C) Practical Experience Certificate
நடைமுறை பட்டறிவு சான்றிதழ்
(D) Physically disabled Certificate
மாற்றுத்திறனாளி சான்றிதழ்

72. A show-cause notice shall be sent to the candidates by the following method
காரணம் கேட்டும் குறிப்பாணையினை விண்ணப்பதாரருக்கு பின்வரும் முறையில் அனுப்பப்பட வேண்டும்

(A) By ordinary post
சாதாரண அஞ்சல் மூலமாக
(B) By Speed post
துரித அஞ்சல் மூலமாக
(C) By Registered Post with Acknowledgement due
ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக
(D) e-mail address of the candidate
விண்ணப்பதாரரின் மின்னஞ்சல் முகவரிக்கு

73. The PSD/OTD section shall allot how many application per table per day for physical certificate verification?
நேரடி சான்றிதழ் சரிபார்ப்பின் போது ஒரு நாளைக்கு ஒரு மேஜைக்கு எத்தனை விண்ணப்பங்களை PSD/OTD பிரிவுகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும்?

(A) Twelve
பனிரெண்டு

(B) Fifteen
பதினைந்து

(C) Ten
பத்து

(D) Twenty
இருபது

74. The proposed provisional admission shall only be scrutinized by the following sections.
தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து இறுதியாக அனுமதிக்கப்படும் பணியினை பின்வரும் பிரிவு மட்டுமே செய்ய வேண்டும்.

(A) APD
(B) OTD
(C) RND
(D) PSD

75. In the Commission's Office, the total 102 sections, based on works have been classified as ___________ parts.
தேர்வாணைய அலுவலகத்தில் உள்ள 102 பிரிவுகள் வேலையின் அடிப்படையில் எத்தனை பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன?

(A) Three
மூன்று

(B) Two
இரண்டு

(C) Four
நான்கு

(D) Five
ஐந்து

76. In the Commission's Office the Bill and Receipts department has been classified as ___________.
தேர்வாணைய அலுவலகத்தில் இயங்கும் பட்டி மற்றும் வரவுகள் துறை கீழ்க்கண்ட துறையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது

(A) Confidential Work Department
மந்தணத் துறை

(B) Core Work Department
அதி முக்கிய பணிகளை மேற்கொள்ளும் துறை

(C) Non-Core Work Department
அதி முக்கியமில்லாத பணிகளை மேற்கொள்ளும் துறை

(D) None of the above
இவை எதுவும் இல்லை

77. In which department staff with less than two years of experience in the Commission's Office shall not be considered for posting?
தேர்வாணைய அலுவலகத்தில் இரண்டு வருடங்களுக்கு குறைவாக பணி செய்து வரும் அலுவலர்களை எந்த துறையில் பணி அமர்த்தக்கூடாது?

(A) Personnel Department
பணியாளர் துறை

(B) Bills and Receipts Department
பட்டி மற்றும் பெறுதல் துறை

(C) Confidential Work Department
மந்தணப் பணிகள் துறை

(D) Oral Test Department
நேர்முகத் தேர்வு துறை

78. The following staff of Commission's Office shall not be considered for transfer or deputation
தேர்வாணைய அலுவலகத்தில் பணிபுரியும் கீழ்க்கண்ட பணியாளர்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றவோ அல்லது மாற்றுப்பணிக்கோ அமர்த்தக் கூடாது

(A) Deputy Secretary
துணை செயலாளர்

(B) Section Officer
பிரிவு அலுவலர்

(C) Librarian/Telephone Operator
நூலகர்/தொலைபேசி இயக்குபவர்

(D) Assistant Section Officer
உதவி பிரிவு அலுவலர்

79. To which departments all new recruits to the Commission's Office shall be posted only?
தேர்வாணைய அலுவலகத்தில் புதியதாக தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படும் தெரிவாளர்கள் கீழ்க்கண்ட துறைகளில் மட்டுமே பணியமர்த்தப்படவேண்டும்

(A) Confidential Work Departments
மந்தணம் பணிகள் கொண்ட துறைகள்

(B) Core Work Departments
அதி முக்கிய பணிகள் கொண்ட துறைகள்

(C) Non-Core Work Departments
அதி முக்கியமில்லாத பணிகள் கொண்ட துறைகள்

(D) None of the above
இவை எதுவும் இல்லை

80. When the staff of Commission's Office shall submit the Personal Register, Tappal Register etc. to the perusal of Joint Secretary?
தேர்வாணைய அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பிரிவில் பராமரிக்கப்படும் தன்பதிவேடு, அஞ்சல் பதிவேடு முதலியவற்றை இணைச் செயலாளரின் பார்வைக்கு எப்போது சமர்ப்பிக்க வேண்டும்?

(A) Every month
மாதம் தோறும்

(B) Every odd month
ஒற்றைப்படை மாதங்கள் தோறும்

(C) The 6th and 12th month of the year
வருடத்தின் 6வது மற்றும் 12வது மாதங்களில்

(D) Every even month
இரட்டைப்படை மாதங்கள் தோறும்

81. It shall be the responsibility of the following officer to see that the Personal Register/Tappal Register etc. are properly maintained and submitted to the Officers concerned on due dates
ஒரு பிரிவில் பராமரிக்கப்படும் தன்பதிவேடு, அஞ்சல் பதிவேடு போன்றவை சரியாக பராமரிக்கப்படுகின்றனவா, உரிய தேதியில் உயர் அதிகாரிகளின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு யாரைச் சார்ந்தது?

(A) Section Officer of the Concerned Section
அப்பிரிவின் பிரிவு அலுவலர்

(B) Under Secretary of the Concerned Section
அப்பிரிவின் சார் செயலாளர்

(C) Deputy Secretary of the Concerned Section
அப்பிரிவின் துணைச் செயலாளர்

(D) Joint Secretary
இணைச் செயலாளர்

82. The used and unused question booklet wrappers received in the Commission's Office shall be destroyed within a period of ___________ by the RFD.
தேர்வாணைய அலுவலகத்திற்கு வந்து சேரும் உபயோகிக்கப்பட்ட மற்றும் உபயோகிக்கப்படாத வினாபுத்தகத்தின் மேலுறையினை எத்தனை காலத்திற்குள் RFDயால் அழிக்கப்பட வேண்டும்?

(A) One week
ஒரு வாரத்திற்குள்

(B) Two weeks
இரண்டு வாரத்திற்குள்

(C) One month
ஒரு மாதத்திற்குள்

(D) Two months
இரண்டு மாதத்திற்குள்

83. The main written examination (Descriptive Type) for recruitment to the post of District Educational Officer shall be held at the following examination centre
மாவட்ட கல்வி அலுவலர் பதவி தெரிவிற்கான முதன்மை எழுத்துத் தேர்வு (விரிந்துரைக்கும் வகை) பின்வரும் தேர்வு மையங்களில் நடைபெறும்

(A) Chennai only
சென்னை மையம் மட்டும்

(B) All the District Headquarters
அனைத்து மாவட்ட தலைநகரங்களில்

(C) All the Taluk Headquarters
அனைத்து வட்ட தலைநகரங்களில்

(D) Chennai, Madurai and Coimbatore
சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர்

84. In case of Descriptive Type Examination, how many candidates a Invigilator shall be supervised?
விரிந்துரைக்கும் வகை தேர்வுகளில் ஒவ்வொரு கண்காணிப்பாளரும் கண்காணிக்கப்பட வேண்டிய தேர்வர்களின் எண்ணிக்கை என்ன?

(A) Twenty
இருபது

(B) Fifteen
பதினைந்து

(C) Ten
பத்து

(D) Five
ஐந்து

85. How long the Reserve list shall be in force?
ஒரு பதவிக்கான "காப்பு பட்டியல்" எவ்வளவு காலம் வரை நடைமுறையில் இருக்கும்?

(A) Upto Two years
இரண்டு ஆண்டுகள் வரை

(B) Upto One year
ஓராண்டு வரை

(C) Upto Three years
மூன்றாண்டுகள் வரை

(D) Till the regular list of selected candidates is drawn up for the subsequent recruitment to the same post
அதே பதவிக்கான அடுத்த தெரிவில் தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் காலம் வரை

86. Memoranda of selection in the case of all the selected candidate shall be sent through ___________.
தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தெரிவு குறிப்பாணை பின்வரும் முறையில் அனுப்பப்பட வேண்டும்

(A) In person
நேரிடையாக

(B) By ordinary post
சாதாரண தபால்

(C) E-mail/Speed post
மின்னஞ்சல்/விரைவுத் தபால்

(D) Registered post with acknowledgement due
ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் மூலமாக

87. The section maintaining the Relaxation Register shall submit it the Under Secretary concerned for checking in the following period
விதிகளை தளர்த்தல் குறித்த அரசாணை விபரங்களை பதிவு செய்யும் "தளர்த்தல் பதிவேடு" பராமரிக்கும் பிரிவானது அந்த பதிவேட்டினை சார் செயலாளரின் பார்வைக்கு சமர்ப்பிக்கப் படவேண்டிய காலம் என்ன?

(A) during the first week of every month
ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில்

(B) during the last week of every month
ஒவ்வொரு மாதமும் கடைசி வாரத்தில்

(C) once in every two months
இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை

(D) once in every fifteen days
பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை

88. When the Commission's "Annual Planner" shall be hosted in the Commission's website?
தேர்வாணையத்தின் "ஆண்டுத் திட்டம்" தேர்வாணைய இணையதளத்தில் வருடந்தோறும் எப்போது வெளியிடப்பட வேண்டும்?

(A) On or before 15th of every December
டிசம்பர் மாதம் 15ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ

(B) On or before 10th of every December
டிசம்பர் மாதம் 10ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ

(C) On or before 25th of every December
டிசம்பர் மாதம் 25ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ

(D) On or before 31st of every December
டிசம்பர் மாதம் 31ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ

89. The consolidated register of visitors shall be maintained as a record by which section?
தொகுக்கப்பட்ட பார்வையாளர்கள் பதிவேடு எந்த பிரிவால் பராமரிக்கப்பட வேண்டும்?

(A) Personnel Department
பணியாளர் துறை

(B) Tappal Section
அஞ்சல் பிரிவு

(C) Bills and Receipts Department
பட்டி மற்றும் பெறுதல் துறை

(D) Liasion Wing
தொடர்பு பிரிவு

90. A maximum of how many days shall be permitted to be availed of at a time inclusive of saturdays, sundays and Government Holidays?
ஒரு நேரத்தில் சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு விடுமுறை உள்பட அதிகபட்சமாக எத்தனை நாட்கள் விடுமுறை எடுக்கலாம்?

(A) Twelve
பனிரெண்டு

(B) Twenty
இருபது

(C) Ten
பத்து

(D) Seven
ஏழு

91. The following leave shall be combined and availed with casual leave
தற்செயல் விடுப்புடன் கீழ்க்கண்ட விடுப்பினையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்

(A) Compensatory Holiday
ஈடுசெய் விடுப்பு

(B) Earned leave
ஈட்டிய விடுப்பு

(C) Unearned leave on medical certificate
மருத்துவ சான்றிதழுடன் கூடிய ஈட்டா விடுப்பு

(D) Maternity leave
மகப்பேறு விடுப்பு

92. Basic servants shall complete __________ years from their regularisation to become eligible to avail unearned leave on Private Affairs.
அடிப்படை அலுவலர் தனிப்பட்ட காரணங்களுக்கான ஈட்டா விடுப்பினை எடுக்க, பணி வரன் முறை செய்யப்பட்ட தேதியிலிருந்து எத்தனை வருடங்கள் பணியாற்றியிருக்க வேண்டும்?

(A) Ten
பத்து

(B) Twenty
இருபது

(C) Fifteen
பதினைந்து

(D) Twelve
பனிரெண்டு

93. The fees claimed by the Senior Counsel shall be settled within how many days?
மூத்த வழக்குரைஞரால் கோரப்படும் கட்டணத் தொகை எத்தனை நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும்?

(A) Ten
பத்து

(B) Fifteen
பதினைந்து

(C) One month
ஒரு மாதம்

(D) One week
ஒரு வாரம்

94. All other materials (except books) after three months from the date of issue shall be discarded and handed over to the following Department
நூலகத்தில் உள்ள புத்தகங்களைத் தவிர மற்ற வெளியீடுகள் அனைத்தும் அவைகள் வெளியிட்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு கீழ்க்கண்ட துறையிடம் ஒப்புடைப்பு செய்யப்பட வேண்டும்

(A) Personnel Department
பணியாளர்கள் துறை

(B) Rules and Notification Department
விதிகள் மற்றும் அறிவிக்கை துறை

(C) Bills and Receipts Department
பட்டிகள் மற்றும் பெறுதல் துறை

(D) Records and Forms Department
பதிவுறுகள் மற்றும் படிவங்கள் துறை

95. The quorum for holding a meeting of the Commission shall be __________ of the members including Chairman, in position.
தேர்வாணையத்தின் கூட்டம் நடைபெற குறைவெண் வரம்பு (தலைவர் உட்பட) எவ்வளவு?

(A) two-thirds of the members
மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு

(B) one-third of the members
மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு

(C) three-fourth of the members
மொத்த உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கு

(D) one-fourth of the members
மொத்த உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கு

96. When the agenda shall be ready if a Commission meeting is scheduled to be held on the Friday of a week?
தேர்வாணையத்தின் கூட்டம் ஒரு வாரத்தில் வெள்ளிக்கிழமை நடத்தலாம் என தீர்மானிக்கப்படும் போது அக்கூட்டத்தில பொருள் நிரல் எப்போதுக்குள் தயாராக இருக்க வேண்டும்?

(A) By Tuesday of that week
அதே வாரத்தில் செவ்வாய்கிழமை அன்று

(B) By Monday of that week
அதே வாரத்தில் திங்கட்கிழமை அன்று

(C) By Wednesday of that week
அதே வாரத்தில் புதன்கிழமை அன்று

(D) By Friday of the previous week
முந்தைய வாரத்தின் வெள்ளிக்கிழமை அன்று

97. To whom the Review of Disciplinary Cases against Deputy Secretary shall be circulated?
துணைச் செயலாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கை குறித்த கோப்பு யாருக்கு மறு ஆய்வு செய்யும் பொருட்டு சுற்றில் விட வேண்டும்?

(A) One member in Rotation
சுழற்சி முறையில் ஒரு உறுப்பினருக்கு

(B) Two members in rotation
சுழற்சி முறையில் இரண்டு உறுப்பினர்களுக்கு

(C) Chairman
தேர்வாணையத் தலைவருக்கு

(D) Secretary
செயலாளருக்கு

98. By which system, the memorandum of admission and rejection memorandum to candidates applying for selection for admission to the Rashtriya Indian Military College shall be despatched?
இராஷ்டிரிய இந்தியன் மிலிடெரி கல்லூரி சேர விண்ணப்பித்தவர்களுக்கு அனுமதி குறிப்பாணை மற்றும் நிராகரிக்கப்பட்டதற்கான குறிப்பாணை எவ்வாறு அனுப்பப்பட வேண்டும்?

(A) SMS
குறுஞ்செய்தி மூலமாக

(B) e-mail
மின்னஞ்சல் மூலமாக

(C) Mass Mailing System
மாஸ் மெயிலிங் சிஸ்டம் மூலமாக

(D) In Person
நேரிடையாக

99. A tender Drafting Committee shall be formed and constituted by the following officials
விலைப்புள்ளி விவரங்களை ஒப்பந்தப்புள்ளி முறை மூலமாக அழைப்பதற்கு அமைக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி வரைவு குழுவில் பின்வரும் அலுவலர்கள் இடம்பெற வேண்டும்

(A) Deputy Secretary/Under Secretary Section Officer
துணைச் செயலாளர்/சார் செயலாளர்/பிரிவு அலுவலர்

(B) Under Secretary/Section Officer/Assistant
சார் செயலாளர்/பிரிவு அலுவலர்/உதவியாளர்

(C) Deputy Secretary/Section Officer/Assistant
துணைச் செயலாளர்/பிரிவு அலுவலர்/உதவியாளர்

(D) Joint Secretary/Under Secretary/Assistant
இணைச் செயலாளர்/சார் செயலாளர்/உதவியாளர்

100. The area upto which an advertisement of a tender notice in dailies about a "work" which cost above Rs. 5 Crore and upto Rs. 75 Crores
ரூபாய் 5 கோடிக்கு மேல் ரூ. 75 கோடி வரை மதிப்புள்ள "வேலை" குறித்த ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எந்த பரப்பு வரை உள்ள செய்திதாட்களில் வெளியிடப்பட வேண்டும்?

(A) Upto District Level
மாவட்ட அளவில்

(B) Upto State Level
மாநிலம் அளவில்

(C) Upto South India
தென்னிந்தியா வரை

(D) All India
இந்தியா முழுமைக்கும்